**செய்தி வெளியீடு எண்: 399** **நாள்: 11.07.2012**

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களில் சூலை 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் 14.07.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெ.மு.பஷீர் அஉறமது
ஆணையாளர்

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>எண். 167/83, தம்பு செட்டி தெரு, முத்தியால்பேட்டை, சென்னை - 1 |
| 2 | இராயபுரம் | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>எண். 1, நைனியப்பன் தெரு, ( 540 , திருவொற்றியூர் நெடுஞ்சாலை)<br>பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 21 |
| 3 | பெரம்பூர் | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>மாதவரம் நெடுஞ்சாலை, பள்ளிக்கூடத் தெரு, பெரம்பூர்,<br>சென்னை - 11 ( பெரம்பூர் - SBI எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | சௌந்தரபாண்டியன் மேல்நிலைப்பள்ளி,<br>எண். 76, N M K தெரு, அயனாவரம், சென்னை – 23 |
| 5 | அம்பத்தூர் | மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி<br>எண் 7, சரஸ்வதி பாண்டுரங்கன் தெரு, கிருஷ்ணாபுரம்,<br>அம்பத்தூர், சென்னை - 53 |
| 6 | வில்லிவாக்கம் | I C F இணைப்பு பெட்டி தொழிற்சாலை,<br>பணியாளர் சமூக நலக்கூடம், வடக்கு காலனி – I C F சென்னை 38 |
| 7 | திருவொற்றியூர் | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி,<br>எண் 32, இராஜாஜி தெரு, மாதவரம், சென்னை – 60 |
| 8 | ஆவடி | சமுதாய கூடம், வீராபுரம் , சென்னை 55<br>( புதிய கன்னியம்மன் நகர் - செல்லும் வழி) |
| 9 | தி.நகர் | சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி,<br>15 ஈஸ்வரன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33 |
| 10 | மயிலாப்பூர் | அவ்வை ஊறாம், பெசண்ட் அவின்யூ, அடையார், சென்னை 20 |
| 11 | பரங்கிமலை | நேரு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கல்லூரி சாலை,<br>நங்கநல்லூர், சென்னை 114, ( பழவந்தாங்கல் சுரங்கபாதை அருகில்) |
| 12 | தாம்பரம் | சமூதாய நலக்கூடம், காமராஜாபுரம், செம்பாக்கம், சென்னை - 73,<br>(செம்பாக்கம் பேரூராட்சி அலுவலகம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | ஸ்ரீகோகுலகிருஷ்ணன் கல்யாண மண்டபம்,<br>எண் 20, பிள்ளையார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை -15 |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை உயர்நிலைப்பள்ளி,<br>எண்.1, மாடல் பள்ளி சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை – 6<br>(அப்பல்லோ குழந்தைகள் மருத்துவமனை அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சென்னை நடுநிநிலைப்பள்ளி,<br>26, தைபூன் அலிகான் தெரு, சேப்பாக்கம், சென்னை -5 |
| 16 | சோழங்கநல்லூர் | தந்தை பெரியார் அரசு மேல்நிலைப்பள்ளி, கலைமகள் தெரு,<br>புழுதிவாக்கம், சென்னை – 91 |

பெ.மு.பஷீர் அஉறமது
ஆணையாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**